கடவுள் துணை.

# செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும்வெளிவரும்

## ஒரு தமிழ்ப் பத்திரிகை.

## இருபத்தெட்டாந்தொகுதி.

அன்பளிப்பு. திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்கள்

**Vol. XXVIII.**

சுக்ல—பிரமோதூதவருஷ

**1929–1930.**

பத்திராதிபர்:—திரு. நாராயணையங்கார்.

மதுரைத்தமிழ்ச்சங்கமுத்திராசாலை.

மதுரை.

உ

# செந்தமிழ்.

## இருபத்தெட்டாந்தொகுதியின்

### உள்ளுறை.


| விஷயம். | | எழுதியவர். | பக்கம். |
|---|---|---|---|
| ஆரியன் வாகடவெண்பா:— | | உதவிப்பத்திராதிபர் | கஉக, கஎஎ |
| ஆன்மலிங்கமாலை:— | | ஸ்ரீமத். சோமசுந்தரதேசிகர். | ருஎ |
| இருபெயரொட்டாகு பெயரும் அன்மொழித்தொகையும் | ,, | சி. கணேசையர் | ருகூஉ |
| இனவெழுத்தாராய்ச்சி | ,, | கே. நரசிம்மன் | ருOரு |
| உதாக்கிரியை | | உதவிப்பத்திராதிபர் | கசகூ |
| உந்தீற்றுவினைச் சொல்:— | | கல்யாணசுந்தரன் | ௩அக |
| ஐயவினா:— | ,, | பண்டித. சித. நாராயணசாமியார் | ககூஎ |
| ஒரு மறுப்பு:— | ,, | ரெ. ராமையங்கார். | கககை |
| ஓர் ஐயம்:— | ,, | ராமகிருஷ்ணசடகோபதாசர் | சகூக |
| கம்பராமாயண இன் கவித்திரட்டு:— | ,, | ராவ்ஸாஹிப். வெ. ப. சுப்பிரமணியமுதலியார். | கூ, உகூ, எரு, கஉரு, கஅக, உ௩எ, ௩உரு, சOரு, ச௩எ. |
| கம்பராமாயண கௌஸ்துப மணி மாலை:— | ,, | கே. என். சிவராஜபிள்ளை | சஅரு |
| கம்பருவமகயம்:— | ,, | ஜெ. நாராயணசுந்தரம். | உருகூ |
| குருபரம்பரை— எம்பெருமானார் வைபவம்:— | | உதவிப்பத்திராதிபர். | கூஉ |
| குன்றத்தூர்க் கல்வெட்டுக்கள்:— | ,, | சோமசுந்தரதேசிகர் | கச௩ |
| சில திருத்தங்கள் :— | | ஸ்ரீமத். மு. இராகவையங்கார். | உO |

| | | |
|---|---|---|
| சிலாலேகைகளும் அவைகளின் பாதுகாப்பின் அவசியமும் | ஸ்ரீமத். S R. பாலசுப்பிரமண்யம் | ௪0௧ |
| சேரர் தாயமுறை:— | ,, ல. கிருஷ்ணசாமிப்பிள்ளை, M A., B L. | ௨௭௭ |
| சேரர் தாயமுறை.— | ,, வைத்தியநாதசாமி தேசிகர். | ௫௧௮ |
| சேர வமிசாவளி | ,, மு. இராகவையங்கார். | ௧௫ |
| தமிழிலுள்ள நிறச் சொற்கள் | ,, சுவாமி ஞானப்பிரகாசர் | ௩௮௬ |
| தமிழ்க்கடல்:— | ,, மானேஜர் தமிழ்க்கடலாபீஸ். | ௩௮௮ |
| தமிழ்ப் பாஷையின் விசித்திரங்கள்:— | சுவாமி ஞானப்பிரகாசர் | ௩௪௩ |
| தமிழ்மக்கள்கடமை | ஸ்ரீமத் K. G. சேஷையர். | ௩௬௫ |
| தமிழ்மொழி வளர்ச்சி:— | ,, சி. கணேசையர். | ௧ |
| தனித்தமிழ்—ஆங்கிலத்தமிழ் - ப்பரீக்ஷைத் தேர்ச்சிக்குறிப்பு:— | | ௩௨௧ |
| திருக்குறள்மூலமும் தெளிபொருள் வசனமும்:— | பத்திராதிபர். | ௨௩௫ |
| திருச்செந்தூர்ப்பரணி:— | உதவிப்பத்திராதிபர். | ௨௨௧ |
| திருமுருகாற்றுப் படையும்நச்சினார்க் கினியருரையும்:— | ஸ்ரீமத். கு. குமாரசாமி. | ௩௫௭ |
| தொல்காப்பியச் சூத்திரப்பொருளாராய்ச்சி:— | ,, சி. கணேசையர். | ௬௬, ௧௩௧ |
| தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு:— | ,, P S சுப்பிரமணியசாஸ்திரியார், M. A., L. T. | ௪௬, ௩௫௩. |
| தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையாசிரியரும் தெய்வச்சிலையாரும்:— | ,, ம. நா. சோமசுந்தரம்பிள்ளை | ௪௫௭ |

| | | |
|---|---|---|
| தொல்காப்பியமும் வடமொழிச் சிக்ஷைப் பிராதி சாக்கிய நிருக்தங்களும்:— | ஸ்ரீமத். P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் M.A., L.T., | சங |
| பரிசோதனத் தொடர்:— | பண்டித சி. த. நாராயணசாமியார் | சசங |
| ஷை | ஸ்ரீமத் சி. கணேசய்யர் | சஅகூ |
| பிராசாத அகவல், பிராசாத விருத்தம்: | ,, சோமசுந்தரதேசிகர். | ருஉக |
| பிராசாததீபம்:— | ,, சோமசுந்தரதேசிகர் | சஉக |
| பிராசாதமாலை:— | ,, சோமசுந்தரதேசிகர். | சுஙங |
| புறநானூற்றின் பழமை | ,, P. S. சுப்பிரமணியசாஸ்திரியார் M.A., L.T., | கசகூ |
| புறநானூற்றுக் குறிப்பு:— | ,, P. S. சுப்பிரமணிய சாஸ்திரியார் M A., L.T. | ஙஎஎ |
| மங்களவாழ்த்து :— | ,, கி. வா. ஜகந்நாதையர். | உங |
| மங்களவாழ்த்து:— | ,, ஜெ. நாராயணசுந்தரம் | ஙருசு, கூஎ, |
| மதிப்புரை :— | | உஙசு, ஙருரு, சகூங, ருசங. |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்தெட்டாம் வருடக் கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம் :— | | கஎ |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 28-ம் வருடக்கொண்டாட்ட மஹாஸபையக்ராஸனர்க்கு ஷை சங்கத்தார் அளித்த வரவேற்புப்பத்திரம் :— | | உக |
| மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் 28-ம் வருடக்கொண்டாட்ட மஹாஸபையக்ராஸநருபந்யாஸம் :— | | உச |
| மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் வரவுசெலவுகணக்கு :— | | (பகுதி க, சு, எ, அ, கூ, க0. |
| வெண்பாமாலையாராய்ச்சி:— | ஸ்ரீமத். T. N. அப்பனையங்கார் | சகசு, சசகூ, சகூஎ. |


(இத்தொகுதியில் வெளிவந்த நூல் முற்றுப்பெற்றது.)


| | | |
|---|---|---|
| அரும்பொருள் விளக்க நிகண்டு:- | ஸ்ரீமத். S. வையாபுரிப்பிள்ளை B.A.,B.L. | (பகுதி க, உ, சு, அ, க0, கக.) |


---

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி—உ அ.] சுக்கில ஞு கார்த்திகை மீ [பகுதி—க.

Vol. XXVIII. November–December–1929. No. 1.

## தமிழ்மொழி வளர்ச்சி.

தமிழ் என்பது வடக்கண் வேங்கடமும் தெற்கண் குமரியும் எல்லையாகிய நிலத்து வாழும் மாந்தராற் பேசப்படுவதொரு மொழி. மொழி எனினும் பாஷையெனினும் ஒக்கும். அம்மொழியைப் பேசுவோர் 'தமிழர்' எனப்படுவர். அம்மொழி வழங்கும் நாடு 'தமிழ்நாடு' எனவும், 'தமிழகம்' எனவும் பெயர்பெறும்.

தமிழ்மொழி பண்டுதொட்டுள்ளது. "என்றுமுள தென்றமிழ்" என்பர் கம்பரும். ஆயினும், அதனை ஆதியிலே ஆராய்ந்து செம்மை செய்தவர் அகத்தியனாரே. அஃது,—

"உழக்குமறை நாவினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவினி னும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்"

என்னுங் கம்பர் வாக்கானு முணரப்படும். அகத்தியனார் செம்மை செய்தகாரணம்பற்றி, உபசாரமாக "அகத்தியன்பயந்தசெஞ்சொல்" என்றும் புலவர் கூறுப.

தமிழ்மொழியை அகத்தியனார் ஆராய்ந்து செம்மைசெய்ததேயன்றித் தாம் செம்மை செய்தவாறே அம்மொழிக்கு வரம்பாக 'அகத்தியம்' என்னும் இலக்கணநூலை இயற்றியும், அந்நூலைத் தொல்காப்பியர் முதலிய மாணாக்கர்கள் பன்னிருவருக்குங் கற்பித்தும், சங்கநிறுவித்தும், இவ்வாறே அத்தமிழ்மொழியைப் பல்லாற்றாற் பெரிதும் வளர்த்து வந்தனர்.

தமிழ்மொழியை அகத்தியனுர் வளர்த்தற்குச் சங்கநிறீஇப் பெருந் துணைபுரிந்தவர்கள் பாண்டியமன்னர்களே. ஒருமொழியின் வளர்ச்சிக்கு அம்மொழிக்கண் வல்ல புலவர்களே யன்றி, அம்மொழிக்குரிய அரசர்களும் பெரிதுங் காரணர்களாகின்றார்கள். ஏனெனின், தத்தம் மொழிக்கண் ஒவ்வொருவருக்கும் மிகுந்த அபிமான முண்டு. ஆதலின், பாண்டிய மன்னர்களும் தமக்குரிய மொழி தமிழ்மொழியாதலினலே, அதன்கட் பெரிதும் அபிமானமுள்ளவர்களாய் அதனை அவ்வாறே வளர்த்துவந்தனர். அதனல், தமிழ்மொழியும் பெரிதும் வளர்ச்சியடைந்தது.

அகத்தியனுர்க்குப்பின்னும் ஓர் சங்கம் நிறுவித் தமிழ்மொழியைப் பாண்டியமன்னர்கள் பெரிதும் வளர்த்துவந்தனர். அன்றியும் தமிழ் மொழிக்கணுள்ள அபிமானம்பற்றித் தமிழ்ப்புலவர்களையும் பெரிதுஞ் சன்மானித்துவந்தனர்.

தமிழ்நாட்டரசர்களுள், பாண்டியமன்னர்களேயன்றிச் சேர சோழ அரசர்களும், குறுநிலமன்னர்களும் தமிழ்ப்புலவர்களைப் பெரிதுஞ் சன்மானித்துவந்தார்கள்.

தமிழ்மொழி இயற்கையிலே இன்பமுள்ளது. ஆதலால் அதனுலாகிய கவிகளும் இயற்கையிலே இன்பமுள்ளனவாகும். இயற்கையிலே இன்பமுள்ளது செயற்கையின்பமும் பெறுமாயின், அஃது எத்துணை இன்பம்பயக்குமென்பது சொல்லவும்வேண்டுமா? இன்பம் பெற இயற்றிய தமிழ்க்கவிகளைக் கேட்பதில் நம்தமிழரசர்களுக்கு மிகப் பிரியம். அதுபற்றி இனிய தமிழ்க்கவிகளை இயற்றுந் தமிழ்ப்புலவர்களை அவர்கள் பெரிதுஞ் சன்மானித்துவந்தார்கள். அரசர்களேயன்றிக் கவிச்சுவையறிந்த பிரபுக்களும் தமிழ்ப்புலவர்களைப் பெரிதுஞ் சன்மானித்துவந்தார்கள். அவர்களெல்லாம் தம்மீது புகழ்க்கவி பாடிவரும் தமிழ்ப்புலவர்களுக்குச் சன்மானமாக நிதிமாத்திரமா கொடுத்தார்கள்? நிலமுங் கொடுத்தனர்; மனையுங் கொடுத்தனர்; நாடுங் கொடுத்தனர்; நகருங் கொடுத்தனர். அவைகொடுத்ததுமாத்திரமா? தம் புதல்வரையும் கொடுத்தனர். அதுமாத்திரமா? அவர்கூறிய வசையும் பொறுத்தனர்; அவர் ஏறிய பல்லக்கும் பொறுத்தனர். என்றால், தமிழ் மொழிக்கண் அவர்கள் வைத்த அபிமானம் இத்துணையென நம்மால் வரையறுக்கமுடியுமா? அரசர்கள் புலவர்களுக்குச் செய்த சன்மானம்

இவை என்பதும், இத்துணைய என்பதும் பதிற்றுப்பத்து முதலிய நூல்களினால் இன்றும் அறியலாம். வசைபொறுத்தமை, சோழன் நலங்கிள்ளிதம்பி மாவளத்தான் தாமப்பல்கண்ணனார்கூறிய "சோழன் மகனல்லை" என்னும் வசையைப் பொறுத்தான் எனப் புறநானூற்றில் வரும் ௪௩-ம் செய்யுளா லறியப்படுகின்றது. பல்லக்குப் பொறுத்தமை, படிக்காசுப்புலவர் தொண்டைமண்டலசதகம் பாடி அரங்கேற்றிய போது அதனைக் கேட்ட கத்தூரிமகன் கறுப்பன் என்பான் அவர்க்குப் பொன்மாரி பொழிந்து அவர் ஏறிய தந்தப்பல்லக்குஞ் சுமந்ததாக,—

"கன்மாரி காத்தமுகில் கத்தூரி யருண்மாவைக் கறுப்ப னென்னும்
வின்மாரி தனதுகிளை யத்தனையுஞ் சபைகூட்டி வியந்து கேட்டுச்
சொன்மாரி பொழிந்திடவே சிரகாகம் பிதஞ்செய்து சுருளுந் தந்து
பொன்மாரி பொழிந்துதந்தப் பல்லக்குஞ் சுமந்துமிகு புகழ்பெற் றானே."

என அப்புலவர் பாடிய கவியா னறியப்படுகின்றது.

இங்ஙனஞ் சன்மானிப்போர் பலரிருந்தமையானன்றோ சன்மானம் பெறும்பொருட்டுப் பாடும் புலவரும் பலராயினர். சங்க இலக்கியங்களிலே பாடப்பட்டோராயுள்ளவர் எத்துணையர்? பாடினோராயுள்ளவர் எத்துணையர்? பாடிய கவிகள் எத்துணைய? இவற்றையெல்லாம் நாம் உற்றுநோக்குவோமாயின், அக்காலத்திலே தமிழபிமானமும் தமிழ் வளர்ச்சியும் எவ்வளவு இருந்தன என்பதை நாம் நன்கு அறியலாம். இக்காலத்திலோ சன்மானிப்பவர் மிகச் சிலரினுஞ்சிலர். அதனாற் பாடுவோரும் அருகினர். தமிழ்வளர்ச்சியும் அருகியது. ஆதலால், தமிழ் வளர்ச்சியை யாம் பெரிதும் வேண்டின தமிழ்ப்புலவர்களைச் சன்மானித்தல்வேண்டும். சன்மானம் இல்லையாயின் அவர்கள் எம் கவிக்குப் பயன் மூளைவரட்சியும் நெஞ்சுநோவும் கைவருத்தமுமே யெனக்கருதிப் பாடுதற் கூக்கமுறார்கள். அவ்வருத்தங்கள்தீரச் சன்மானங் கிடைக்குமாயின், பின்னும் பின்னும் அதன்கண் முயல்வார்களன்றோ? இக்காலத்திலே பாடப்பெற்றவைகளாகிய பரங்கிரிப்பிரபந்தம், உலகியல்விளக்கம் முதலிய நூல்களுக்குச் சன்மானஞ்செய்தவர் யாவர்? பாடுவோர்க்கு மாத்திரமன்று; உரைநூல்களியற்றுவோர்க்கும், செந்தமிழ் முதலிய பத்திரிகைகளிலே சிறந்த ஆராய்ச்சிகளெழுதுவோர்க்கும் சன்மானஞ் செய்தல்வேண்டும். பழந்தமிழ்நூல்களை வழுவற நோக்கி அச்சிட்டு வெளிப்படுத்துவோர்க்கும் சன்மானஞ்செய்தல் வேண்டும்.

சங்ககாலத்தின்பின், ஆருகதசமயப்புலவர்களும் பற்பலநூல்களியற்றித் தமிழைப் புரந்துவந்தனர். சிந்தாமணி, சூளாமணி முதலியன அவர்களியற்றிய நூல்கள். அவர்கள்காலத்தின்பின்னே கம்பர், ஒட்டக்கூத்தர், புகழேந்தி முதலிய புலவர்கள் தோன்றித் தமிழரசர் சன்மானமும் பெற்றுத் தமிழைப் பெரிதும் புரந்துவந்தனர். கம்பர் பாடியன இராமாவதாரம் முதலியன. ஒட்டக்கூத்தர் பாடியன குலோத்துங்கசோழன்கோவை, தக்கயாகப்பரணி முதலாயின. புகழேந்தி பாடியநூல் நளவெண்பா. அவர்கள்காலத்தின்பின்னே மடாதிபதிகளும் சேதுபதிகளுந் தமிழைப் பெரிதும் புரந்துவந்தனர். மடாதிபதிகள் பற்பலநூல்கள் இயற்றியும், இயற்றுவித்தும், சன்மானித்தும், கற்பித்தும் புரந்தனர். சேதுபதிகள் தமிழ்ப்புலவர்களைப் பெரிதுஞ் சன்மானித்துவந்தனர். அதன்பின்னர்த் திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் பழையநூல்கள் சிலவற்றை வழுவறநோக்கிப் பதிப்பித்தும், புதுநூல்களியற்றியும், புத்துரைசெய்தும், கற்பித்தும் தமிழைப் புரந்துவந்தனர். இவர்காலத்தின்பின், திருவாவடுதுறை ஆதீனவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் புராணங்களும் கோவைகளும், அந்தாதிகளும் முதலாகப் பற்பலநூல்களியற்றியும், பலர்க்குக் கற்பித்தும் தமிழைப் பெரிதும் வளர்த்துவந்தனர். இவரைக் கவிமழைபொழியும் ஒரு மனுஷமேகமென்னலாம். இவர்காலத்திலே, யாழ்ப்பாணத்துநல்லூரிற் பிறந்த ஆறுமுகநாவலரும், யாழ்ப்பாணத்திலும் சிதம்பரத்திலுமாக இரு வித்தியாசாலைகளைத் தாபித்தும், கற்பித்தும், சென்னையிலே ஒரு அச்சியந்திரசாலை தாபித்துப் பழையநூல்கள் சிலவற்றை வழுவறப் பதிப்பித்தும், புதுநூல்கள் சில இயற்றியும், பிரசங்கங்கள்செய்தும் தமிழ்மொழியைப் பலவாறு வளர்த்துவந்தனர். இவரைச் சொன்மழை பொழியும் ஒரு மனுஷமேகமென்னலாம். இவர்காலத்திலே ராவ்பகதூர் தாமோதரம்பிள்ளையவர்கள், தொல்காப்பியம் (நச்சினார்க்கினியருரை) கலித்தொகை முதலிய பழையநூல்கள்சிலவற்றைப் பதிப்பித்துத் தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் உபகரித்தனர். இவருக்குப்பின், மஹாமஹோபாத்தியாய, உ. வே. சாமிநாதையரவர்கள், பதிற்றுப்பத்து, ஐங்குறுநூறு, பரிபாடல், புறநானூறு, பத்துப்பாட்டு என்னும் தொகைநூல்களையும், சிந்தாமணி, மணிமேகலை, சிலப்பதிகாரம், பெருங்கதை முதலிய தனிநூல்களையும் திருத்தமும், விளக்கமும், பிறவும்

அருமையப் பதிப்பித்துத் தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் உபகரித்துவருகின்றனர். பழையவும், அரியவும், பெரியவுமாகிய நூல்களையெல்லாம் அரிதினுய்ந்து, பதிப்பித்து வெளிப்படுத்தியவராதலின் அவர்களுள் இவரே தலையாயவரென்பதும் புனைந்துரையாகாது. இதனையறிந்தே இவர்களுக்குச் சேதுபதியரசரும், பாண்டித்துரைத்தேவரும், பிறரும் தத்தமக்கியன்ற சன்மானங்கள்செய்துளார்கள். [அன்றியும், இவர்செய்துவரும்பேருபகாரம்கருதியே, மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் கௌரவ காரியதரிசியும் தமிழ்வளர்ச்சியில் விருப்பமிக்கவருமாகிய ஸ்ரீமான். T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், பல தமிழ்நேயச்செல்வர்களின் உதவிகொண்டு மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 24-ம் வருடக்கொண்டாட்டத்தில் (ரூபா ஐயாயிரம் அடங்கிய) பொற்கிழியொன்றை இவர்களுக்கு ஸன்மானமாக வழங்கினார்கள். இவ்வாறு பொற்கிழி வழங்கிய வள்ளன்மை தமிழகத்தாராற் பெரிதும்பாராட்டத்தக்கது.] ஐயாவர்களேயன்றி, இக்காலத்திலே நம் தமிழ்நாட்டில் அங்கங்கே பல புலவர்கள் நூல்களியற்றியும், கற்பித்தும், சங்கங்கள் தாபித்தும் தமிழ்மொழியை வளர்த்தலிற் பெரிதும் ஊக்கமுடையவர்களாயிருக்கின்றார்கள்.

அங்ஙனம் ஊக்கமுடையவர்களாய் இக்காலத்திலே பலரும் பல்லாற்றானும் தமிழைப் புரந்துவரினும் முன்னைக்காலத்திற்போல அத்துணைப் பெரிதாக அது வளர்ச்சியடைந்திலது. அதற்குக் காரணம் தமிழரசும், அதன் பரிபாலனமும் இல்லாமை என்றே துணிந்துசொல்வேம். ஆயினும், அக்குறைவை ஒருவாறு தம் தமிழ்ப்பரிபாலனத்தால் நிவிர்த்திசெய்தவர்கள், சேதுபதியாசவம்மிசத்தவரும் பிரபுவும் பரோபகாரியும் புலவரும், பாலவனத்தம் ஜமீந்தாருமாகிய ஸ்ரீமாக். பாண்டித்துரைத்தேவரவர்களே. அவர்கள், மதுரைமாநகர்க்கண்ணே நான்காஞ் சங்கமாகத் தமிழ்ச்சங்கமொன்றை நிறுவியும், அதற்கு அங்கமாகச் சேதுபதிசெந்தமிழ்க்கலாசாலை, பாண்டியன்புத்தகசாலை, தமிழ்ச்சங்கமுத்திராசாலை என்னும் இவற்றைத் தாபித்தும், செந்தமிழ்க்கலாசாலையிலே பலமாணவர்களை ஊண் உடை முதலியனகொடுத்துக் கற்பித்தும், முத்திராசாலையிலே பழையவும் புதியவுமாகிய நூலுரைகள் பலவற்றைப் பதிப்பித்து வெளிப்படுத்துவித்தும், செந்தமிழ் எனப் பெயரிய ஒரு மாசிகபத்திரிகையைப் பல புலவர்களுடைய அரும்பெரும் விஷயங்களோடு வெளிப்படுத்துவித்தும், தனித்தமிழ்ப்பரீக்ஷை, ஆங்கிலகலாசாலைத்

தமிழ்ப்பரீக்ஷை என இருபரீக்ஷைகளை வகுத்து அப்பரீக்ஷைகளிலே சித்திபெய்தினவர்களுக்குப் பட்டமும் பரிசிலும் கொடுத்தும், இயன்ற வாறு புலவர்களைச் சன்மானித்தும், தாமும் சில நூல்க ளியற்றியும் இப்படியே தமிழ்மொழியைப் பலவாறு வளர்த்துவந்தனர். அங்ஙனம் வளர்த்துவந்தவர்களாகிய தேவரவர்கள் தமிழ்நங்கை தவக்குறைவோ! தமிழ்நாட்டார் தவக்குறைவோ!! என்னும்படி விரோதிகிருது௵ கார்த்திகை௴ ௧௰௨ தேகவியோகமடைந்தார்கள். அவர்களுக்குப் பின் நான்காஞ்சங்கமாகிய அதற்குப் பாஸ்கரசேதுபதி மகாராஜாவின் பெருந் தவப்புதல்வரும், புலவர்பாடும் புகழாளரும் பெருங்கொடைவள்ளலு மாகிய மகா-௱-௱-ஸ்ரீ ராஜராஜேசுவரசேதிபதியரசரவர்கள் தலைவ ராகித் தேவரவர்கள்செய்த தமிழ்ப்பரிபாலனம் தளர்ச்சியுறாது தாமும் நடத்திவந்தார்கள். அவர்களும் தமிழ்மங்கையின் துரதிருஷ்டத்தாற் போலும் சென்றவாண்டிலே தேகவியோகமடைந்தார்கள். அவர்களுக் குப் பின், இப்போது அச்சங்கத்துக்குத் தலைவராயிருப்பவர்கள் பாஸ்கரஸேதுபதியரசரின் ஸஹோதரரும் ஸகலகலாவிநோதருமாகிய மகா-௱-௱-ஸ்ரீ தினகரசேதிபதியரசரவர்களே. அவர்கள் வேண்டுவன வற்றைச் செய்து தம்முன்னோர்போல நம் தமிழ்மொழியை வளர்த்துப் பல்லாண்டு வாழுமாறு கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும், தேவரவர்கள் தமிழ்ச்சங்கத்தைத் தாபித்தபின்னும் தமிழ் நாட்டின்கண் அங்கங்கே செல்வப்பிரபுக்களும் புலவர்களுமாகப் பற்பல சங்கங்கள் நிறுவி நடத்திவருகின்றார்கள். அவர்கள், தமது சங்கங் களைத் தமிழ்ச்சங்கத்தோடு ஒன்றுபடுத்தி, அதனை முதற்சங்கமாகவும், தமதுசங்கங்களைக் கிளைச்சங்கமாகவும் வைத்து நடத்திவருவார்களா யின், நம் தமிழ்நாட்டிற்கும் தமிழ்மொழிக்கும் வரும் மேன்மை எத் துணையதாகும். கடைச்சங்கம் இருந்த இடமும் இம்மதுரையேயாத லின், அதனை இது நினைவுகூரச்செய்புமாகலானும், இது அரசசங்க மாதலானும் இது நமக்குப் பெருமையளிக்குமியல்பினதாதலின் இத னையே முதற்சங்கமாகக்கொள்ளுதல்வேண்டும். ஏனைய சங்கத்தலைவர்கள் தமிழ்வளர்ச்சியொன்றையே உண்மைபாக நோக்கியிருப்பார்களாயின், தம் புதுச்சங்கங்களை நிறுவும்பொருட்டுச் செலவுசெய்த நிதித்தொகை யையெல்லாம் இதற்கே உதவி இதனையே வளர்க்கமுயன்றிருக்கலாமே? அங்ஙனஞ் செய்யாமையால், அவர்கள் அக்கருத்தோடுமாத்திரம்

தொடங்கியிருப்பார்களென யாம் எப்படி எண்ணலாம்? ஆதலால் இனி, அந்நேடு ஒன்றுபடித்தியேனும் நடாத்தித் தமிழைப் பெரிதும்வளர்க்க முயல்வார்களென எண்ணுகின்றேம்.

மேலும், தமிழ்ச்சங்கம் தனித்தமிழ்ப்பரீக்ஷை நடத்தத்தொடங்கிய ஆண்டுமுதல் இவ்வாண்டுவரையும் ஒவ்வொருவருடத்தும் பரீக்ஷைக்குத் தோற்றிய மாணவர்தொகையை நாம் நோக்கும்போது பரீக்ஷைக்குத் தோற்றிய மாணவர்தொகை வரவரக் குறைவடைந்துள்ளது. அதற்குக் காரணம் புதுச்சங்கப் பரீக்ஷைகளே. ஆதலால் அக்குறைவு வாராவண்ணம் சங்கங்கள் யாவுமொன்றுகிப் பரீக்ஷையும் ஒன்றாதல்வேண்டும். ஒன்றுகுமாயின் அக்குறைவு வரமாட்டாது. தமிழ்ச்சங்கத்துக்கும் தளர்ச்சி வரமாட்டாது. மதிப்பும் வளரும்; ஒற்றுமையும் வளரும்; தமிழும் வளரும். ஆதலால் இதனைச் சங்கத்தலைவர்கள்யாவருஞ் சிந்திப்பார்களாக.

இன்னும், தமிழ்வளர்ச்சியின்பொருட்டுச் செய்யவேண்டியன பல வுளவாயினும், அவற்றுள் (க) தனித்தமிழ் அகராதி ஒன்று எழுதுதலும், (உ) தமிழ்ப்புலவர்கள் சரித்திரமும், தமிழ்ப்பரிபாலனஞ்செய்த அரசர்கள்சரித்திரமும் அவரவர் சிறப்புக்களோடு எழுதுதலும், (ங) வசனநூல்கள் பல எழுதுதலும் என்னும் இவைகள் அவசியம் செய்யவேண்டியனவாகும். ஏனெனிற் கூறுதும்.

க. தனித்தமிழ் அகராதி ஒன்று எழுதுதல்:-இது ஏன் அவசியம் செயற்பாலதெனின்? காலகதியால் அழிந்துவிடும் தமிழ்ச்சொற்களைப் பரிபாலித்தற்பொருட்டேயாம். முதற்சங்கத் திறுதியிற் செய்யப்பட்டதும், அகத்தியத்தின்வழிவந்ததுமாகிய தொல்காப்பியத்திற்காணப்படும், கஃடு, கஃது, கஃபு, அதோளி, இதோளி, உதோளி, அழான், புழான், முதலிய சொற்கள் பல பிற்காலத்திலே வழக்கிறந்தனவாகக் காணப்படுதலினாலும், முதற்சங்ககாலத்துக்குமுன்னும் பல சொற்கள் வழக்கிறந்தனவாக இருத்தல்கூடுமென்பது அந்நூல்கொண்டு ஊகிக்கப்படுதலினாலும், இடைநிலமபக்கத்திற்குரிய தனிமொழிகள் பல இறந்தன என நச்சினார்க்கினியர் கூறியதும் ஒருபோது உண்மையாயிருத்தலும் கூடுமாதலாலும், தமிழ்ச்சொற்கள் பல காலகதியால் அழிந்துவிடுகின்றன என்பது இனிதுணரப்படும். சொற்கள் அழிதற்குக் காரணம் புதுப்புதுச்சொற்கள் தோன்றுதலே. "பழையன கழிதலும் புதியன புகுதலும்—வழுவல கால வகையி னானே" என நன்னூலார் கூறியதூஉம் அதுபற்றியே, சொற்கள் வழக்கிறப்பினும் அவற்றை நாம்

போற்றிக்கோடற்கு வழி அகராதியேயாதலின் அது வேண்டுமென்பதை அறிஞர் யாவரும் மறுக்கமாட்டார்கள். தமிழ்மொழி இவை என உணர்தற்கும் தனித்தமிழ் அகராதி இருப்பது நன்றேயாம்.

உ. தமிழ்ப்புலவர் சரித்திரமும், தமிழைப் பரிபாலனஞ்செய்த அரசர்களின் சரித்திரமு மெழுதுதல்:—இது என் அவசியம் செய்யற்பாலதெனின்? கற்போர்க்குத் தமிழ்மொழிக்கண் அறிவும் அபிமானமும் தமிழ்ப்பரிபாலனத்தின்கண் ஊக்கமும் உண்டாக்குதற்பொருட்டேயாம். எழுதுங்கால், இஃது அகராதிமுறையாக எழுதப்படுதல் நன்று. சரித்திர முறையாகவும் எழுதலாம்.

௩. வசனநூல்கள் பல எழுதுதல்:—இது என் அவசியம் செய்யற்பாலதெனின்? கற்றவர்க்கன்றிக் கல்லார்க்கும் பயன்படற் பொருட்டேயாம். எழுதுங்கால் இவற்றைப் பெரிதும் பிறமொழிக் கலப்பில்லாதனவாகவும், பிழையில்லாதனவாகவும், தமிழ்நடையுடையனவாகவும், சுவையுடையனவாகவும் எழுதல்வேண்டும். வல்லவர்கள் எழுதுதலும்வேண்டும். இவ்வாறு எழுதியவசனநூல்களையே அதிபர்கள் விருப்போடு வித்தியாசாலைகளிற் படிப்பிக்கத்தக்கனவாகச் செய்தலும் வேண்டும். இவைகளை நம் தமிழ்ச்சங்கம் முயன்றுசெய்யுமாயின் தமிழும் வளரும்; பொருளும் வளரும்; சங்கமும் வளரும்.

இவைகளேயன்றி இன்னும் நம் தமிழ்ச்சங்கம் முயன்றுசெயற்பாலன சில உள. அவை, தமிழகத்துக்கு அவசியம்வேண்டுவனவாகப் பிறமொழிக்கண் உள்ள அரியநூல்களை மொழிபெயர்ப்பித்தலும், தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணையாயுள்ள செந்தமிழ்ப்பத்திரிகையைக் காலந்தவறாது வெளிவரச்செய்தலுமாகும். நம் தமிழ்ச்சங்கத்துக்கு அங்கத்தினராயுள்ள புலவர்களொவ்வொருவரும் அரிய பொருளுரைகளை வருடமொன்றுக்கு ஒருவருக்கு இரண்டு மூன்றாகவேனும் எழுதியுதவுவார்களாயின், 'செந்தமிழ்' காலந்தவறாது வெளிவருமே? அதனை அங்கத்தவர்கள் யாவரும் சிந்திப்பார்களாக.

இங்கே சொல்லப்பட்டனவன்றி, இன்னும் தமிழ்வளர்ச்சிக்குரியனவாகப் பிறர்கூறுமவற்றையும் தங்கருத்தோடுபொருந்தநோக்கிப் பொருந்துமவற்றை நம் தமிழ்ச்சங்கத்தலைவரும் அங்கத்தவர்களும் அதிக ஊக்கத்தோடும் செய்து தமிழ்மொழியை வளர்ப்பார்களாக. அங்ஙனம் வளர்த்தற்கு அருள்செய்யுமாறு எல்லாம்வல்ல இறைவனைப் பன்முறை பிரார்த்திக்கின்றேம்.

சி. கணேசையர்.

# கம்பராமாயண இன்கவித்திரட்டு.

[உள-ம் தொகுதியின் சுகசு-ம் பக்கத்தொடர்ச்சி.]

## மாரீசன் மானுகி இராமனிருந்த வனத்துக்கு வருதல்.

[மாரீசன், இராமன் இருந்த வனத்தையடைந்து, அளவற்ற ஒளிமிக்குப் பூமியும் ஆகாயமும் பொலிவுறச்செய்யும் பொன்மானுருவம்பூண்டு, சீதை தங்குமிடத்தைத் தேடிச்சென்ருன்.]

## மாரீசனுன மானை மற்ற மான்கள் முதலிய பிராணிகள் தொடர்தல்.

413. கலைமான்முத லாயின கண்டவெலாம்,
அலைமா னுறும் ஆசையின் வந்தனவால்,
நிலையாம்மன வஞ்சனை நேயமிலா
விலைமாதர்கண் யாரும் விழுந்தெனவே.

இ-ள். நிலையான மனவஞ்சகமுடைய(வரும்) நேசமில்லாத (வருமான) விலைமாதரிடத்து(க் காமுகர்) யாவரும் (மயங்கி) விழுதல்போல, (அம்மானைக்) கண்ட கலைமான்கள் முதலான பிராணிகள், (சீதையைத் தேடி) அலைகின்ற (அந்த) மான் (செல்லல்) உற்ற திசையில் (அதனைநாடித் தொடர்ந்து) வந்தன.

'கண்டன' என்பது, அன்சாரியை பெருது 'கண்ட' என நின்றது. 'கண்ட கலைமான் முதலாயின' என்பது, செய்யுளாதலால், 'கலைமான் முதலாயின கண்ட' என மாறிவந்தது. இதன்பின் இராமன் 'முறையும் முடிவும் மில மொய்யுயிர்' என்னலால், 'முதலாயின' என்பதற்கு முதலான பிராணிகளெனப் பொருள் கூறப்பட்டது.

முதலடிக்குக் "கலைமான் முதலாகிய மான்வகைகளில் (இப்பொன் மானைப்) பார்த்தவைகள் எல்லாம்" என்பதும், இரண்டாமடிக்கு (1) "கடலை ஒத்த [மிகவும் அதிகமான] ஆசையுடனே வந்தன." (2) "(பிராட்டியைத்தேடி) அலைகின்ற (பொன்) மானினுலே அடைகின்ற ஆசையினுலே வந்தன" என்பவையும் முந்திய உரைகள்.

"கலை—ஆண்மான். இப்பொன்மான் தன்னைத் தொடர்ந்துவந்த கலைமான்கள்மேல் சிறிதும் நேயம் வையாது பொன்னின்மேல் [இலக்குமிமேல்] நாட்டமாகத் திரிந்தமையால், தம்மை விரும்பும் ஆடவர்மேல் நேயம்வையாது பொன்னையே விரும்புகின்ற வேசையை அம் மானுக்கு உவமைகூறினர்" என்பதும், "விலைமகளிரது வஞ்சனையை அறியாமல் அவர்கள் மேனிமினுக்கையே நோக்கி அவர்களிடத்துச் சாதாரணசனங்கள் பலரும் கண்டவளவில் ஆசைவைத்துச் சேர்தல்போல, அந்தப் பொன்மானினது மாயையை அறியாமல் அதன் உடம்பின்விளக்கத்தையே நோக்கி மான்கள் பலவும் அதனைக் கண்டமாத்திரத்தில் மிக்க ஆசைப்பெருக்கத்துடன் தொடர்ந்தன என்பதாம்." என்பதும், "தம்மிடத்து ஆசைகொள்ளும் ஆடவரிடத்து விலைமாதர் தாம் ஆசைகொள்ளாமைபோலத் தன்னிடத்தில் ஆசைகொள்ளும் பிற மான்களிடத்து அப் பொன்மான் ஆசைகொள்ளாமையின், இவ்வுவமை மிகப் பொருந்தும்" என்பதும் முந்திய உரைகளிற் கூறப்பட்டவை.

சீதை அம் மானைக் கண்டு இராமனுக்குத் தெரிவிக்க
இலக்குமணன் அது மாயமான் எனல்.

[அப்போது, கொய்யாத பூவென்று கூறுதற்குரிய கையால் பூக் கொய்வாளாய்ச் சாலையினின்று புறப்பட்டுச் சோலையிலே திரிந்துகொண்டிருந்த மெய்ம்மான்போன்ற சீதை, அந்தப் பொய்ம்மானைப் பார்த்தாள். அது வஞ்சனைமானென்று நெஞ்சிலுணராளாய் அதன்மேல் ஆசையுற்று, இதனைப் பிடித்துத்தரும்படி என் நாயகனை வேண்டுவேனென்று, இராமனிடம் சென்று, "ஒரு மான், காயம்முழுதும் பொன்மயமாய்க் காதுகளும் கால்களும் மாணிக்கமயமாயுள்ளது, நீ காணத்தக்கது" என, அவனும் அதனைக் காண ஆசை பூண, இலக்குமணன், "அம் மானின் காயமானது, அதனை மாயமானென ஐயுறச்செய்கின்றது" என இராமன் கூறுவான்.]

அதனை இராமன் மறுத்துக் கூறுதல்.

414. நில்லாவுல கின்னிலை நேர்மையினால்
வல்லாரும் உணர்ந்திலர்: மன்னுயிர்தாம்
பல்லாயிர கோடி பரந்துளவால்,
இல்லாதன இல்லை யிளங்குமரா.

இ - ள். இளையோய்! நிலைபாத (தன்மை ஒன்றுமட்டும் நிச்சயமாகத் தெரியப்பட்டுள்ள இந்த) உலகத்தின் (மற்றைய) தன்மைகளை நுண்மை (யான மதி)யினால் (நோக்க) வல்லவரும் அறிந்திலர். (உலகின் பல தன்மைகளிலே பிராணிகளையுடைமை ஒருதன்மை. அந்தப்) பிராணிகள் பல்லாயிரகோடி (வகை) யாக (அளவின்றிப் பூமியில் எங்கும்) பரந்துள்ளன. (அந்தப் பிராணிவருக்கங்களுள் நாம் மனத்தாற் பாவிக்கக்கூடிய அங்க அடையாளங்களுடைய எப்படிப்பட்ட பிராணியும் இருத்தல் இயல்வதே. ஆதலால், இன்ன அங்க அடையாளங்கள் உள்ள பிராணிகள்) இல்லாதன (என்று சொல்லக்கூடியவை எவையும்) இல்லை.

நிலை - தன்மை. நேர்மை - நுண்மை. மன் - நிலைபெற்ற. குமரன் - இளையோன். இளங்குமரன் - மிகவும் இளையோன்.

முந்திய உரைகளில், இறுதி அடிக்கு (உலகத்தில்) 'இல்லாத பொருள்கள் இல்லை' யெனப் பிராணிகளல்லாத பிற பொருள்களையும் உளப்படுத்திப் பொருள் கூறியிருப்பது பொருந்துமாயினும், இதன் பின், இராமன் 'முறையும் முடிவும் மிலை மொய்யுயிர்' என, இந்த இறுதியடிக்கூற்றை அநுவதித்துக் கூறுதலால், மேலே கூறிய பிராணிகளை மட்டும் குறித்தபொருளே இராமன் கருதியபொருளாமெனக். 'இளங் குமரா' என்பதில் இளமை *குமாரத்தன்மை என்ற ஒருபொருளிருமொழிகள் அடுக்கிவந்து இளமைமிகுதி குறித்தன. இராமன் இலக்குமணனைநோக்கி, நீ என்னினும் மிகவும் இளையோனாதலால், புதியன புதியனவாக இயற்கைப்பொருள்களைக் கண்ட அநுபவம் என்னினும் குறைவாக உடையாய். ஆதலால் இம்மான் இயற்கையென யானெண்ணுகிறபடி நீ எண்ணுகின்றாயில்லை பென்பது குறிக்க, இலக்குமணனை வேறுவிதமாக விளியாது, 'இளங்குமரா' வென விளித்தானென்னலாம்.

### சீதை அந்த மானைப் பிடித்துத்தர இராமனை வேண்ட, அவன் இசைய, இலக்குமணன் தடுத்தல்.

[இவ்வாறாக, இராமன் இலக்குமணனுடன் பேசிக்கொண்டிருக்கும் போது, சீதை, "உங்கள் பேச்சு முடியுமளவும் அம் மான் காத்திராது,

* குமாரம் — இளமை (தமிழ்ச்சொல்லகராதி).

எங்கேனும் ஏகிவிடும்" என்று வருந்தச் "சீதா! அதைக் காட்டு" என்று அவள்பின் இராமன் செல்வானானான். இலக்குமணன் இராமன்பின் சென்றான். இராமன் அம் மானைக் கண்டு வியந்து இலக்குமணனை நோக்கித் "தம்பி! இந்தமான் தன்னைத் தான் ஒக்குமன்றி வேறு ஒப்பு யாதும் இல்லாதது. இதனைக் கண்ட பிராணிகள் யாவையும் விளக்கைக் கண்ட விட்டில்கள்போல இதனிடம் வந்து விழுகின்றன வென்றால், ஆடவரும் அணங்காரும் இதனை அவாவுதல் ஆச்சரியமாமோ?" என்றான். இலக்குமணன், அது நல்ல தன்றென ஐயமின்றி அறிந்து, "இது பொன்னிறமாயிருப்பது பொன்னாகவேயிருந்தாலும், இதனால் நமக்கு ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. இதனைவிட்டு யாம் நம் இருப்பிடமேகுவதே ஏற்றது" என்றான். அது கேட்ட சீதை ஆத்திரப்பட்டு "இதனைப் பிடித்து எனக்குக்கொடுக்கவேண்டும். நாம் அயோத்திக்குத் திரும்பியபோது, அங்கே இது அனைவரும் ஆச்சரியமடையத் தக்க அபூர்வமான விளையாட்டுப் பொருளாயிருக்கும்" என, இராமன், பிடிக்க இசைய, இலக்குமணன் தடுப்பானாய் "இது இராக்கதர் யாதோ ஒரு வஞ்சனை செய்யக்கருதித் தந்திரமாகச் செய்துவிட்ட மாயமான். இது, ஒருகால், முன் இருகால்* தப்பியோடிய மாரீசனாயிருக்கலாமென்பது முடிவில் தெரியவரும்" என்றான்.

---

* இருகால் (—இரண்டுமுறை) தப்பியோடிய வரலாறுகள், "தாடகையை இராமன் கொன்றபின் மாரீசன் தனது தம்பியான சுபாகு முதலிய அரக்கர்களுடன்சென்று விசுவாமித்திரருடைய வேள்விக்கு இடையூறுசெய்யத்தொடங்கியபொழுது, இராமனெய்த அம்புகளால் சுபாகுவும் மற்றை யரக்கர்களும் இறக்க, அப்பெருமான் பிரயோகித்த வாயவ்யாஸ்திரத்தால் மாரீசன் கடலிலே தள்ளப்பட்டு உயிர்கொண்டுமீண்ட வரலாறு"ம், "தன் தாயையும் தம்பியையும் கொன்று தன்மேலும் அம்புசெலுத்தித் துரத்திய காரணத்தால் இராமனிடம் பகைகொண்ட மாரீசன், பின்பு இராமன் தண்டகாரணியத்தில் பஞ்சவடியாச்சிரமத்தில் எழுந்தருளியிருந்தபோது, இரண்டு அரக்கர்களுடன் மான்வேடம் பூண்டு அத் தண்டகவனஞ்சேர்ந்து முனிவர்கள் ஓமஞ்செய்யுமிடங்களையும் நீராடுமிடங்களையும் கிட்டி அவர்களை வருத்திக் கொன்று தின்றுகொண்டுவருகையில், இலக்குமணனுடனும் சீதையுடனும் தவவேடங்கொண்டிருந்த இராமனைக் கண்டு, இவன் இப்பொழுது தவவேடம்பூண்டிருத்தலால், என்னைக் கொல்லானென்று கருதி அருகில் ஓடிவந்து தனது கூரிய கொம்புகளினால் இராமனை முட்டிக் கொந்திக் கொலைசெய்ய முயலுமளவில், அப்பெருமான் சினங்கொண்டு

### இலக்குமணன் தடுத்ததை இராமன் சரியன்றெனஅவன் தான் பிடித்துவருவதாகச் சொல்லல்.

"அது வஞ்சனைமானுனல், வாளியினல் மடித்துவிடுவோம். அதனல் அரக்கரைக் கொல்ல நாம் மேற்கொண்டுள்ள கடனைக் கழிப்போமாவோம். அன்றேல் அதனைப் பிடித்திடுவோம். இவ்விரண்டு செயல்களில், எதுவும் தீயதன்று" என்றான். இலக்குமணன், "இது, யான் எண்ணுகிறபடி மாயைமானுனல், இதனை எய்துவிட்டுப் பின்னின்றார் எத்தனை யிராக்கதரேனும் அவர்களெல்லாரையும் கொன்று திரும்புவேன். அன்றேல், இதனைப் பிடித்துவருவேன்" என்றான்.

### சீதை நீ பிடித்துத்தாராய்போலு மென்று கண்ணீர்வடிக்க, இராமன் இலக்குமணனை அவளைப் பாதுகாக்கச்சொல்லிவிட்டு அந்த மானைத் தொடர்தல்.

அப்போது, சீதை, இராமனைநோக்கி, "நீயே பிடித்துத்தால் வேண்டும்; தாராய்போலும்;" என்று தாரைதாரையாகக் கண்ணீர் வடித்தாள். உடனே, இராமன், "இலக்குமண! நானேபோய்ப் பற்றி வருவேன். நீ இவளைப் பர்ணசாலைக்குக் கூட்டிப்போய்ப் பாதுகாத்துக் கொண்டிரு" என, அவன் அவ்வாறுசெய்வானுக, இராமன் பொய்ம் மானைத் தொடர்ந்துபோனான்.

### அதன் மாயத்தை அறிந்து இராமன் அம்புவிட அது 'ஹா ஸீதே! லக்ஷ்மண! என்று அவன்குரல்போல அலறி இறத்தல்.

அது அதிவேகமாக ஓடியது. அவன் விரைந்து நெருங்கியபோதெல்லாம் மிகுவேகமாக ஓடியும், சற்றுப் பிந்தியபோதெல்லாம் தாழ்த்து நின்றும், (அவனை இராவணன்கருத்துக்கிசைவாகச் சீதையைவிட்டு நெடுந்தூரம் செல்லச்செய்துகொண்டு)சென்றது. இவ்வாறு செல்வதைக்

---

சரங்களைத் தொடுத்துவிட்டதனல், இவனுடன் வந்த இரண்டு அரக்கரும் அம்புபட்டுத் தலையறுப்புண்ண, இவன் தான்மாத்திரம் தப்பியோடி யொளித்துத் தவவேடம்பூண்டனன் என்ற வரலாறும்" ஆம்.

கண்டு, இதன் தோற்றமும் தொழிலும் ஒற்றுமையுடையன அல்ல; வேற்றுமையுடையன; இது இராக்கதர்மாயமே; இதனை இலக்குவன் முன்னமே அறிந்தான்; யான் இப்போதுதான் தெரிந்தேன் என்றெண்ணினன். அவ்வாறு அவன் எண்ணிய குறிப்பறிந்து, அம்மான், 'இனி இவன் என்னைப் பிடிக்கமுயலான், மடிக்கமுயல்வான்' என்று தப்ப எண்ணி மிக்க வேகமாக ஓடியது. உடனே இராமன் அம்பை அதன் மேல்விட, அதுபட்டு இறக்கும்போது மானுகவந்த மாரீசன் 'சீதா! லக்குமணா!' என்று இராமன்குரலாகச் சத்தமிட்டுச் செத்துவீழ்ந்தான்.

## இறந்தது மாரீசனேனென்றறிந்து இராமன் விடுதிக்கு விரைந்து திரும்புதல்.

அதுகண்டு, தம்பியின் அறிவை வியந்து, இறந்துவீழ்ந்த வடிவத்தை நோக்கி மாயாமானுகவந்தவன் மாரீசனென்று தெரிந்தான். இவன் என்குரலால் சீதாலக்குமணரை விளித்திறந்தான். இக் குரல் கேட்டுச் சீதை வருந்துவாளே என்று சிந்தைநொந்து, செத்தவனை மாரீசனென்று தெரிந்த இலக்குமணன் உண்மை உரைத்துச் சீதையைத் தேற்றுவானென்று தேறி, இவன் இறப்பதே கருத்தாக வந்திரான், இதற்கு ஏதோ ஒரு சூழ்ச்சி அடிப்படையாக இருக்கின்றது. அதனால், கெடுதிவிளையுமுன் விடுதிக்குத் திரும்புவோமென்று விரைந்து திரும்பினன்.]

மாரீசன் வதைப்படலம் முற்றிற்று.

[தொடரும்.]

வே. ப. சுப்பிரமணியமுதலியார்.

# சேரவமிசாவளி.

## மக்கட்டாயம்.

### [I. சேரர் மரபு.]

உதியஞ்சேரல் × வெளியன் வேண்மாள் நல்லினி

|

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

×(1) பதுமன்றேவி — ×(2) சோழன்மகள்

- (1) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்
- (2) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

- (1) சேரன் செங்குட்டுவன் × இளங்கோவேண்மாள்
  - குட்டுவஞ்சேரல்
- (2) இளங்கோ

### [II. சேரர் மரபு]

அந்துவன் × பொறையன்பெருந்தேவி

|

செல்வக்கடுங்கோவாழியாதன் × பதுமன்றேவி

|

பெருஞ்சேரலிரும்பொறை × அந்துவஞ்செள்ளை

|

இளஞ்சேரலிரும்பொறை

## மருமக்கட்டாயம்.

### [I. சேரர் மரபு.]

(மருமக்கள்வழி) (மக்கள்வழி)

உதியஞ்சேரல் (சகோதரி) வெளியன் வேண்மாள் நல்லினி

நெடுஞ்சேரலாதன் (முதல் சகோதரி) பதுமன்றேவி

(1) களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்
(2) ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

(இரண்டாம் சகோதரி) சோழன் மனைவி

(1) சேரன் செங்குட்டுவன்
(2) இளங்கோ

### [II. சேரர் மரபு.]

(மருமக்கள்வழி) (மக்கள்வழி)

அந்துவன் (சகோதரி) பொறையன்பெருந்தேவி

செல்வக்கடுங்கோவாழியாதன் „ பதுமன்றேவி

பெருஞ்சேரலிரும்பொறை „ அந்துவஞ்செள்ளை

இளஞ்சேரலிரும்பொறை

ஸ்ரீ:

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின்

# இருபத்தெட்டாம்வருடக்கொண்டாட்ட நிகழ்ச்சி விவரம்.

நிகழும் சுக்ல-ஸ்ரீ கார்த்திகைமீ" உரு, உசவ (1929-ம்ஸ்ரீ டிசம்பர்மீ" 8, 9உ) களில் நம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் 28-ம் வருடக்கொண்டாட்டம் இம்மதுரைமாநகரில் ஸேதுபதி உயர்தரக்கலாசாலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதற்கு மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் முதலிய புலவர்பெருமக்களும், ஸேதுவேந்தர்முதலிய புரவலரும், சென்னை எக்ஸிக்யூட்டிவ் கௌன்ஸில் மெம்பரான கனம்பொருந்திய ஸர். நார்மன் எட்வர்டு மார்ஜ் பாங்க்ஸ் துரையவர்கள் முதலிய உயர்தர உத்தியோகஸ்தர்களும் விஜயம் செய்திருந்தனர்.

உரு-உ மாலை 4 மணிக்கு ஸபைகூடியது. முதலில் தமிழ்ச்சங்கக் கலாசாலை மாணவர் இராமலிங்கம் என்பவரால் கடவுள்வாழ்த்துப்பாடப் பட்டபின் இராமநாதபுரம் மகாராஜா மாட்சிமை தங்கிய நாகநாத ஸேதுபதியவர்கள் சென்னை எக்ஸிக்யூட்டிவ் கௌன்ஸில்மெம்பரான ஸ்ரீமான் ஸர். நார்மன் எட்வர்டு மார்ஜ் பாங்க்ஸ் துரையவர்களை இத் தமிழ்ச்சங்கத்தின் கௌரவ அங்கத்தினராயும் இவ்விருபத்தெட்டாம் வருடக்கொண்டாட்ட மஹாஸபைக்கு அக்ராஸநராயும் இருந்து சிறப்பிக்குமாறுவேண்ட, இச்சங்கத்தின் கௌரவ காரியதரிசி ஸ்ரீமான் மாணிக்கவாசகம்பிள்ளையவர்களும், மதுரை அட்வகேட் ஸ்ரீமான் K. இராமையங்காரவர்களும் அதனை ஆமோதிக்க, ஸேதுஸம்ஸ்தான மஹாவித்வான் ஸ்ரீமத். ரா. இராகவையங்காரவர்களும் மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி ஸ்ரீ. உ. வே. சாமிநாதையரவர்களும் தமிழின் பழமை பெருமைகளையும் அது வளர்ந்துவருமாற்றையும் கனம்பொருந்திய ஸர் நார்மன் எட்வர்டு மார்ஜ்பாங்க்ஸ் துரையவர்கள் தகுதியையும் எடுத்துவிளக்கி துரையவர்களைக் கௌரவ அங்கத்தினராகவும் இவ்வருடக்கொண்டாட்ட மஹாஸபைத் தலைவராகவும் பெற்றுச்

சங்கம் விசேஷ அபிவிருத்தியடையவேண்டுமென்று பிரார்த்திக்க ஸபையோர்களுடைய சந்தோஷ ஆரவாரத்திடையே கனம் துரையவர்கள் அதற்கிசைந்து அக்ராஸனத்தமர்ந்தார்கள்.

இராமநாதபுரம் மஹாராஜா மாட்சிமைதங்கிய நாகநாதசேதுபதியவர்கள் சங்கத்தின்சார்பாக அக்ராஸனரான துரையவர்களுக்குச் சரிகைமாலையொன்றைச் சூட்டினார்கள். செந்தமிழ்ப்பத்திராதிபரும் தமிழ்ச்சங்கக்கலாசாலைத் தலைமையாசிரியருமான ஸ்ரீமத். திரு. நாராயணையங்காரவர்கள் துரையவர்களுக்கு சால்வையொன்றை அணிவித்தார்கள். அதன்பின் சங்கக்கலாசாலை யுபாத்தியாயர் ஸ்ரீமத். பண்டித ஹரிஹரையரவர்கள் சங்கத்தின்சார்பாகச் செந்தமிழுதவிப்பத்திராதிபர் இராமாநுஜையங்காரால் இயற்றப்பட்ட வரவேற்புப்பத்திரத்தை வாசித்தனர். இவ்வரவேற்புப்பத்திரம் அழகிய பட்டில் அச்சிடப்பட்டு மிக்க வேலைப்பாடமைந்த வெள்ளிப்பேழைக்குள்வைத்து, சங்கக்காரியதரிசியவர்களால் அக்ராசனரிடம் வழங்கப்பட்டது. மரத்தாற்செய்யப்பட்டதும் தங்கமுலாம் பூசப்பட்ட அம்பாரியுடன்கூடியதுமான அழகிய சிறிய யானையும் சங்கத்தின் கௌரவகாரியதரிசிகளால் சங்கத்தின் ஞாபகச்சின்னமாக அக்ராசனரவர்களிடம் கொடுக்கப்பட்டது.

அப்பால் மோகனூர் வித்வான் ஸ்ரீமத். ஜகந்நாதையரவர்கள் தாம் பாடிய மங்களவாழ்த்துச்செய்யுள்களைப் படித்தனர். பின்னர், சங்கத்தின் கௌரவ காரியதரிசியும், மதுரை அட்வோகேட்டும், சென்னை சட்டஸபை யங்கத்தினரில் ஒருவருமான ஸ்ரீமான் T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் சங்கத்தின் வருடாந்த அறிக்கையும் சங்கக்கொண்டாட்டத்துக்கு வரமுடியாதவர்களனுப்பிய தந்தி கடிதம்முதலியனவும் படிக்கப்பட்டன.

அதன்மேல் சங்கப்பரீக்ஷைகளில் தேறியவர்களுக்குப் பரிசும் யோக்யதாபத்திரங்களும் அக்ராஸனரால் வழங்கப்பட்டன. பரிசு பெற்றவருள் ஒருவரான திருவாளர் பண்டிதர் சங்குப்புலவரவர்கள் தாமியற்றிய வாழ்த்துப்பாக்களைப் படித்தனர்.

பின்பு சென்னைத் திருவளர்செல்வி அலர்மேன்மங்கைத்தாயாரம்மாள் தமிழின் இன்றியமையாமையையும் அதை யாவரும் ஆதரித்துப்

போற்றிவளர்க்க முற்படவேண்டிய அவசியத்தையும்பற்றிச் சுருக்கமாகவும், அழகாகவும் உபந்யஸித்தார்கள்.

அப்பால் அக்ராஸனரான துரையவர்கள் தமிழ்வளர்க்குமாற்றை விளக்கி முடிவுரைகூறவும் சங்கக்காரியதரிசியவர்கள் அக்ராஸனர்க்கும் ஸபையோருக்கும் வந்தனோபசாரங்கூறவும் வந்திருந்தோர்க்கெல்லாம் சந்தன, புஷ்ப, தாம்பூலாதிகள் வழங்கவும் கடவுள்வாழ்த்துடன் முதல் நாள் நிகழ்ச்சிகள் இனிது நிறைவெய்தின.

உசவ திங்கட்கிழமை காலை 9-மணிக்கு மீண்டும் ஸபைகூடியது. மஹாமஹோபாத்தியாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள் ஸபையார்கள் வேண்டிக்கொண்டமைக்கிசைந்து ஸபாநாயகராக வீற்றிருந்தார்கள். கடவுள்வாழ்த்துப் பாடப்பட்டபின் பொள்ளாச்சி முனிஸிபல் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். நா. கனகராஜையரவர்கள் இயற்றிய வாழ்த்துப்பாக்கள் பண்டிதர் சங்குப்புலவரவர்களாற் படிக்கப்பட்டன.

பின்னர் இச்சங்கத்தின் அங்கத்தினருள் ஒருவரும் எட்டயபுரம் ஸம்ஸ்தானவித்வானும் வடமொழி தென்மொழியாகிய இருமொழிப் புலமையும் ஒருங்குவாய்ந்தவருமான திரு. வீ. சாமி ஐயங்காரவர்கள் 'திருக்குறள்' என்ற விஷயமேற்கொண்டு திருக்குறட்கருத்தும் பொருளும் ஆகியவை வடமொழித்தொன்னூல்கள் பலவற்றிலும் ஒன்றியமைந்து காணப்படுமாற்றை இராமாயணம், பாரதம், பகவத்கீதை மநுஸ்மிருதி முதலிய பல நூற்பிரயோகந்தந்து விளக்கி ஸபையோர் வியப்பும் உவப்பும் ஒருங்கடையுமாறு உபந்யஸித்தார்கள். அதன்பின்னர் இச்சங்கத்தின் மஹாஸபைக்கூட்டம் நடந்தது. (அதில் நிறைவேறிய தீர்மானங்கள் பின்னால் வெளியிடப்பட்டுள்ளன.)

அப்பால், சென்னை லெக்ஸிகன்கமிட்டியின் பிரதான தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீமத். மு. இராகவையங்காரவர்கள் சாசனங்களாலும் பிறவாற்றாலும் தாம் அரிதின் முயன்று ஆராய்ந்தறிந்த பிற்காலத் தமிழ்ப் புலவர்களில்: ஆதிநாதகவி, பெருமாணடிகள், பெருநம்பி, வேம்பையர் கோன் நாராயணன், மதுரையாசிரியன் இளங்கௌதமன், பூங்கோயில் நம்பி, மலரிக்கூத்தன், தில்லைவிடங்கன், பெருநம்பற்றப்புலியூர்நம்பி,

வாமனமுனிவர், இராமநாதகவிராயர், உத்தண்டவேலாயுதகவி, திண்டிம கவி, ஞானவரோதயகவிராயர் முதலிய பல புலவர்கள் இருந்தகாலமும் இடமும் இயற்றியநூல்களும் பிறவும் விளங்க அரியதோருபந்யாஸம் செய்தார்கள். பின்னர் மோகனூர் வித்வான் ஸ்ரீமத். ஜகந்நாதையாவர்கள் சம்பந்தர் சமணரைக் கழுவேற்றவில்லையெனறும், சமணர் தாம் அரச னிடம் உரைத்த உறுதிமொழிதவறுவண்ணம் தாமாகவே கழுவேறின ரென்றும் பல நூலாதாரங்களுடன் விரிவாக உபந்யஸித்தார்கள்.

அதன்மேல் அக்ராஸனரவர்கள் நடந்த உபந்யாஸங்களைப்பற்றிச் சுருக்கமாகவும் அழகாகவும் முடிவுரைகூறக் கடவுள்வாழ்த்துடன் காலைக் கூட்டம் நிறைவெய்தியது.

அன்று பிற்பகல் $2\frac{1}{2}$-மணிக்குக் கனம் நார்மன் எட்வர்டு மார்ஜ் பாங்க்ஸ் துரையவர்கள் சங்கவிழாநடந்த ஸேதுபதி உயர்தரகலாசாலைக்கு மறுமுறையாக விஜயம்செய்தார்கள். சங்கவித்வான்களும் பிறரும் துரையவர்களோடு வீற்றிருக்கப் புகைப்படமெடுக்கலாயிற்று. பின்னர் துரையவர்கள் சங்கத்தாரிடம் விடைபெற்றுச்செல்லச் சங்கத்தின் 23-ம் வருஷக்கொண்டாட்டக்கூட்டம் மங்களமாக நிறைவுற்றது.

---

# சில திருத்தங்கள்.

செந்தமிழ் 27-ம் தொகுதியுள் அடியிற்கண்ட திருத்தங்கள் சேர்த்துப் படித்தற்குரியன.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| ௩௬௨ | 25 | இயற்பெயர் கூறி | பெயர்கூறி |
| ௩௬௬ | 31 | அமையும். என்பதனுடன் | [உதியன்-சேரன்] என்பது சேர்க்கத்தக்கது. |
| ௩௭0 | 4 | வேளாவிக்கோமான் மக ளான பதுமன்றேவி. | வேளாவிக்கோமான் பது மன்மகளான தேவி. |
| ௩௭௭ | 9 | வழியில் | வயிற்றில் |
| ௩௮0 | 2 | தன் | உன் |
| ௩௮௩ | 19 | பொறையன் | பதுமன் |
| ,, | 20 | அப்பொறையன் | அப்பதுமன் |
| ,, | 21 | பொறையஞ்செள்ளை | பதுமஞ்செள்ளை |

மு. இராகவையங்கார்.

---

உ

சுக்கில௵ கார்த்திகை௴ ௨௰௨ (8—12—1929)

மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்

# இருபத்தெட்டாம வருஷோத்ஸவத்துக்கு

அக்ராஸநராக விஜயம்செய்த மஹாகனம்பொருந்திய

## ஸர். நார்மன் எட்வர்டு மார்ஜ்பாங்க்ஸ் துரையவர்களுக்கு

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அளித்த

# வரவேற்புப் பத்திரம்.

**நிலைமண்டில ஆசிரியப்பா.**

சீர்அருள் பெருமை ஆர்புகழ் சேர்ஸர்
**நார்மன் எட்வர்டு மார்ஜ்பாங்க்ஸ்** எனும்பேர்
வாய்ந்துஒளி இலகும் மதியோய் வருக !
மன்மொழி யன்றியும் பன்மொழி பயின்று
தென்மொழி யுணர்வு சிறந்தோய் வருக !
கெண்ணியம் மிகுந்த புண்ணிய மூர்த்திநீ
நண்ணிய வரவு நல்வர வாகுக !
ஊட்டம் வேண்டி உழல்தமிழ் மொழியின்
வாட்டம் தீர வரும்மழை முகிலே !
மக்கள் அறிவால் வளர்ச்சி யடையத்
தக்க கருவி தம்நில மொழியே ;
அம்மொழி வளர்ச்சிக்கு அரும்பெரு நூல்கள்
பற்பல தோன்றிப் பரவுதல் வேண்டும் ;
ஆதலின் நிலமொழி, அறிவினிற் சிறந்த
தேச மாந்தரும் செங்கோல் வேந்தரும்
போற்றலால் எவ்வகை ஆற்றலும் பெற்று
விளங்குதல் இயல்பே. மேனாள் நம்தமிழ்,
காவலர் கூட்டப் பாவலர் கூடிய
முதல் இடை கடை எனும் முச்சங் கத்தால்
வளர்ந்துபின் கால வயத்தான் மெலிந்து
தளர்ந்தது கண்டுஅத் தளர்வு தீரப்
**பாண்டித் துரைப்பெயர் பூண்ட பெருந்தகை**

பாஸ்கர ஸேது பதி துணை கொண்டு
வண்டமிழ்ப் புதுவைமன் மார்த்தாண்ட பைரவத்
தொண்டைமான் அருளும் துணையாய் அமைய
நாட்டு சங்கத்தின் நான்கேழாம் இவ்
ஆட்டை விழாவின் அவைக்கு அதிபதியாய்
மன்னும்நின் வரவால் மகிழ்மிகுந் தோங்குக!
தென்மொழி முன்மொழி யாய்ச்சிறந் திடுக!
மாட மதுரை வளரும் இச்சங்கம்
நீணிதி மிகுந்து நிலவுக பெரிதே!
நின்பால் யாங்கள் நிகழ்த்தும் எம்குறைகளை
அன்பொடு செவியேற் றருளுதி அண்ணல்!
தமிழ்மொழி போற்றுதல் தமிழ்நிலம் புரப்போர்
கடமை என்று கருதி, அரசியல்
ஆட்சிமுறை இந்நிலத்து அறிதமிழ் மொழியால்
மாட்சிபெற வழங்கி வரச்செயல் வேண்டுதும்;
தமிழ்க்குழைத் துதவும் தக்கோர் தமக்கும்
கலைபல இயற்றும் கற்றோர் தமக்கும்
பட்டமும் பரிசும் பாலிக்க வேண்டுதும்;
சென்னை ராஜாங்கப் பல்கலைக் கழகத்தில்
தொன்மொழிப் புலமைச் சோதனைக் கிணையாத்
தென்மொழிப் புலமைத் திறமை ஆராய்ந்தும்
மன்னிய புகழ்சேர் அண்ணாமலை தரு
பல்கலைக் கழகத்திலும் அவை பயிற்றியும்
செய்துள உதவியிற் சிறப்புறச் செந்தமிழ்ப்
பல்கலைக் கழகம் பாங்குற நிறுவித்
தென்மொழி வளர்க்கத் திருவுளம் கொள்கெனும்
மெய்ம்மொழி உளங்கொள வேண்டுதும் விழைந்தே.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வாழிஸர் நார்மன் எட்வர்ட் மார்ஜ்பாங்க்ஸ் வளங்கள் மல்கி
வாழிசெந் தமிழ்சேர் சங்கம் வாழி அத் தமிழ்வல்லார்கள்
ஆழிசூழ் உலகமெல்லாம் ஒருகுடை நிழலில் ஆண்டு
வாழிய ஐந்தாம் ஜார்ஜு மன்னன் நீடூழி மாதோ.

# மங்களவாழ்த்து.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் உஅ-ஆவது வருஷோத்ஸவத்தில்,

**மோகனூர் கி. வா. ஜகந்நாதையாவர்கள் பாடியவை.**

தான தத்தன தானந் தனதன
தான தத்தன தானந் தனதன
தான தத்தன தானந் தனதன          தந்ததானன

மாமி குத்திடு மாபாண் டியர்வளர்
கோல்செ லுத்திய சீர்தாங் கியவள
வாழ்வு பெற்றிடு வீறேய்ந் திடுநகர்          கொன்றைமாலைசேர்
மார்பி லக்கணி தேவாம் பசுபதி
யாறு பத்தொரு நாலாந் திருவிளை
யாட லைச்செயும் வாழ்வோங் கியபுரி          சுந்தரேசனார்

தேமி குத்திடு மீனும் பிகைகுக
னுதை ரத்துட னேயாண் டிடநிறை
சீக ரத்தகை யேவாய்ந் திடுவது          மங்குலேறியே
சேரு நற்பொழி லூடோங் கரிதிகழ்
சோலை வெற்பையொர் சார்தாங் கிடுவனு
தேறு நற்றமி ழாய்சான் றவர்பலர்          தங்குகூடலாம்

நேமி குத்தவர் சோகாங் கியதற
நாடு நற்றல மாமீங் கியறமிழ்
நேய மொத்திட வேயோங் கிடநிகழ்          சங்கமீடியே
நீதி யுற்றெழு நாலாண் டுநிறைய
வாரு நற்றின மேயாம் பகலினி
னேரு மெய்த்தலை வோராகிலவா          சன்புகூடினோர்

நாம மிக்கிடு ராசாங் கமதனி
னேகி னைத்திற லேதாங் கிடுபவர்
ஞான நற்குண மாவோங் கலைமிக          ருந்தயாவுளோர்
நார்ம னேட்வர்டு மார்ஜ்பாங்க்ஸ் துரைமுகி
லாயு ணற்புகழ் சீரோங் கியநலம்
நாளு மிக்கிட வேசார்ந் தெழிலொடு          தன்குவாழ்கவே!

தான தான தானதனதன தானதந்த தானன

தோமி லாத மீனவிழியுறு தோகைபங்கன் வாழ்கவே
தூய சீர்கொள் கூட லழகரோர் பூவின் மங்கை வாழ்கவே
நாமி ளுள்வி லாசமதுரையின் மேவுசங்கம் வாழ்கவே
நாக நாத சேது பதிமகி பால னன்கு வாழ்கவே
சேம மேவி வீறுதினகர சாமி மொய்ம்பன் வாழ்கவே
தேறு மார்வ நாவ லவாபி மானவங்கர் வாழ்கவே
தேமு லாவு பாடல் பயிறமிழ் வீரநின்று வாழ்கவே
தேசு நீடி யாருமொளியொடு சீரமைந்து வாழ்கவே.

---

## மதுரைத்தமிழ்ச்சங்கத்தின்
## இருபத்தெட்டாம் வருடக்கொண்டாட்டத்தில்
மஹாகனம் பொருந்திய
## ஸர். நார்மன் எட்வர்டு மார்ஜ்பாங்க்ஸ் துரையவர்கள்
K. C. I. E., C. S. I., I. C. S.,
அக்கிராஸநரா'யிருந்து செய்த
## உபந்யாஸம்.

மதுரைத்தமிழ்ச்சங்கம் தலைவருக்கும் ஏனை அங்கத்தினர்களுக்கும்,

இன்று இம் மகாசபையின் முன்னர் நான் பேசத்துணிந்தது எனக்கே ஒருவிதமான கூச்சத்தை உண்டுபண்ணுகிறது. இந்தச் சங்கம் தமிழ்ப்பாஷையை விருத்திசெய்து தமிழ் இலக்கியங்களை மேம்படுத்தும் உயர்ந்த நோக்கத்தைக் கைக்கொண்டிருக்கிறது. இச்சங்கம் ஸ்ரீமாந். பாண்டித்துரைத்தேவரவர்களால், இராமநாதபுரம் ராஜா பாஸ்கரஸேதுபதி, புதுக்கோட்டை மகாராஜா மார்த்தாண்டபைரவத்தொண்டைமான் இவர்களுடைய ஆதரவைக்கொண்டு நாட்டப்பெற்று, அந்த ஸமஸ்தானங்களின் உதவியாலும், நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் உதவியாலும் நடைபெற்றுவருகிறது. சங்கத்தின் அங்கத்தினர்கள் கல்வி அறிவுகளில் மேம்பட்டவர்களாகவும் அவற்றைப் போற்றி ஆதரிக்கிறவர்களாகவும் இருக்கிறார்கள். இத்துறைகளில் தகுதியுடையவனாக நான் என்னைக் கருதமுடியாது. ஆயினும் தங்களுடைய நோக்கங்களும் முயற்சிகளும் மிகவும் பாராட்டத்தகுந்தவைகளென்று நான் கருதுவதுடன் அவற்றில் என் முழு மனத்துடன் ஈடுபடுவதால் நானும் இச்சங்கத்தில் உரிமை பாராட்டுகிறேன்.

கனவான்களே! பெரியோர்களால் போற்றிவளர்க்கப்பட்ட தமிழ்மொழி உங்களுடைய புராதனமான பரம்பரைச்செல்வம், அதை விருத்திசெய்து அத

ளுல் அடையக்கூடிய எல்லாப்பிரயோஜனங்களையும் தமிழ்மக்கள் அடையும்படி செய்வது தங்களுடைய உரிமையும் கடமையும் ஆகும். தமிழ்மொழியை வளர்க்கும் துறைகள் இன்ன இன்னவென்று உங்களுக்கு நான் எடுத்துரைப்பது ஒருவாறு முறையன்று; ஆயினும் உங்களிடத்து எனக்குள்ள அன்புபற்றி உங்கள் முயற்சிகள் பயன்படுவதற்கு ஏதுவான வழிகள் இரண்டொன்றை இவ்விடத்திற் சுருக்கமாகக்காட்டத்துணிகின்றேன்.

பல நாடுகளிலுமுள்ள சான்றோர்கள் தம் நுண்ணறிவால் வெளிப்படுத்தும் நவீனவிஷயங்கள் பலவற்றையும் கால தேச இயல்புகளுக்கு ஏற்பத் தமிழ் மக்களும் தமிழ்மொழிமூலம் அறிந்து முன்னேற்றமடையத்தக்கதாய்த் தமிழ் மொழியை வளப்படுத்தவேண்டியது இன்றியமையாததாகும். அவ்விதம் புதிய கருத்துக்கள் புதியபொருள்கள் இவற்றை வெளியிடுவதிற் கண்மூடித்தனமாகப் பிறபாஷைகளின் சொற்களை அநாவசியமாக உபயோகியாமல் அவற்றிற்குரிய தமிழ்ப்பதங்களையும், தமிழ்மொழியின் அமைப்பு இயல்புகளுக்குத் தக்கபடி படைத்த சொற்களையும் வழங்குதலே சிறந்ததாகும். அவ்விதம் பிரயோகிப்பதுதான் தமிழ்மொழியின் சுபாவத்தையும் தூய்மையையும் போற்றுவதாகும். தமிழ்ச்சொற்களாலே நன்கு விளக்கிக்காட்டவேண்டியிருக்க அதைவிட்டு Hydro Electric Power என்று என் ஆங்கிலத்தொடர்மொழியை உபயோகிக்கவேணும். இதுபோன்ற பல உதாரணங்கள் காட்டக்கூடுமெனினும் அது மிகையாகையாற் கூறாமல் விடுகின்றேன்.

மேலும் தமிழில்ஸம்பாஷிக்கும்பொழுது பிறமொழிச்சொற்களை இடையிடையே கலந்துபேசுவதைநோக்க என்மனம் வருந்துகின்றது. அவ்வழக்கத்தை முற்றும் விட்டுவிடவேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவ்வழக்கம் பேச்சில்மட்டுமில்லாது எழுத்திலும் அச்சிலுங்கூட வழங்கக்காணுகிறோம். "கேஸ் டிஸ்மிஸ் ஸாயிற்று" என்று சொல்வதைக் கேட்பது சகஜமாயிருக்கிறது. "வழக்குத் தள்ளுபடியாய்விட்டது" என்று எளிதாயும் தெளிவாயும் தமிழிற் சொல்லலாமே.

தமிழ் விருத்தியடைவதற்கான வழிகள் பல இருக்கின்றன. ஒவ்வொன்றையும்பற்றி விரிக்காமல் இரண்டுவழிகளைச் சுருக்கமாகக் காட்டினேன்.

இன்று உங்கள் ஆண்டுநிறைவுவிழாக் கொண்டாட்டத்திற்கு என்னை அழைத்துத் தலைமைதந்து எனக்கு நீங்கள்செய்த மேம்பாடுபற்றியும், நான் மிகவும் பாராட்டி மதிக்கும்படி என்னை உங்கள் சங்கத்தில் ஒரு அங்கத்தவனாக்கியளித்த உங்களது அருமைபற்றியும், நான் உண்மையோடும் மனமகிழ்ச்சியோடும் உங்களுக்கு நன்றிகூறுகின்றேன்.

சபையோர்களே! தன் நோக்கங்களையெல்லாம் செவ்விதாக நிறைவேறித் தமிழ்மக்களுக்குப் பயன்படுமாறு தமிழ்ச்சங்கம் எல்லா நன்மையையும் அபிவிருத்தியையும் அடையும்படி திருவருள்புரியக் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

---

**1929**ஆு டிசம்பர்மீ **7**உ (சுக்கிலஆு கார்த்திகைமீ **22**உ)

காலை **8-30** மணிக்குக் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெயயப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1 மகா-௱-௱-ஸ்ரீ K. ராமையங்கார் அவர்கள், B A., B.L.,
(அக்கிராஸனம் வகித்தவர்)

2 ,, V S. ராமஸ்வாமி சாஸ்திரியாரவர்கள் B.A., B.L.

3 ,, S சோமசுந்தரபாரதி அவர்கள் M.A., B.L.,

4 ,, T C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A , B L., M L.C.,
இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

I 1929-ஆு செப்டம்பர்மீ முதல் நவம்பர்மீ முடிய உள்ள வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

II சிதம்பரம் அண்ணாமலை ஸருவகலாசாலை செனேட்டுக்கு வருகிற சங்க வருஷோத்ஸவ மஹாஸபைக்கூட்டத்தில் சங்கத்தின் பிரதிநிதியைத் தெரிந்தெடுத்தனுப்பவேண்டியிருப்பதால் அதுவரை அவகாசம் கொடுக்கும்படி ஷை ஸருவகலாசாலை ரிஜிஸ்டிரார் அவர்களைக் கேட்டுக்கொள்ள வேணுமென்று தீர்மானிக்கலாயிற்று.

III 1929-ஆு ஜனவரிமீ முதல் மாதந்தோறும் ரூபா நூறு சங்கத்துக்கு உதவி வருவதாக மாட்சிமைதங்கிய ஸேதுபதி மஹாராஜா அவர்கள் உத்தாவு அனுப்பியிருப்பதற்கு நிர்வாகஸபையார் மிகவும் மகிழ்ச்சியுற்று மஹாராஜா அவர்களின் உதாரகுணத்தைப் பெரிதும் பாராட்டி ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள்.

IV சங்கத்துக்கு நன்கொடை புரிந்துள்ள கனவான்களுக்கு நிர்வாகஸபையார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கின்றார்கள். காரைக்குடி மகா-௱-௱ஸ்ரீ கா. சுப. ராம. நாராயணன்செட்டியாரவர்கள் அன்புடன் வாக்களித்துள்ள நன்கொடை ரூபா ஆயிரத்திருநூறையும் அவர்களுக்கு யுக்தமானபடி தகுந்த இடத்தில் தமிழ்ச்சங்கத்தின்பேருக்கு வட்டிக்குக் கொடுத்துவைத்து அதற்கு ஆதாவுவாங்கிச் சங்கமாபீசிற்கு அனுப்பி வைத்து, வட்டியையும் அனுப்பிவரும்படி அவர்களுக்குத் தெரிவிக்கத் தீர்மானிக்கலாயிற்று.

V ஆம்பூரை, சங்கம் ஆங்கிலத்தமிழ்ப்பரீக்ஷை நடத்தப்பெறும் தலங்களுள் ஒன்ருக ஏற்படுத்தலாயிற்று.

VI சங்கத்துக்குவரவேண்டிய நிலுவைகள் விஷயமாக மானேஜர் எழுதிய மெமோ படிக்கப்பட்டது. அதிற்கண்ட (1) வராத நன்கொடைகள், வரவேண்டிய பாக்கியாகக் காட்டப்படவேண்டியதில்லையென்றும், (2) 1-வது லிஸ்டில் 10-வது அயிட்டநிலுவைகளையும், (3) 2-வது லிஸ்டில், 1, 2, 4, 6, 7-வது அயிட்டநிலுவைகளையும், (4) 1926ஆு நவம்பர்மீ

முடிய சங்கத்தின் அங்கத்தினர்களிடமிருந்துவரவேண்டிய சந்தாபாக்கி களையும் வஜாசெய்துவிடவேணுமென்றும் தீர்மானிக்கலாயிற்று.

VII சங்கத்தின் நிர்வாகவிதிகளின் 24-வதுவிதிப்பிரகாரம் கனம்பொருந்திய ஸர். நார்மன் மார்ஷ்பாங்கீஸ் துரையவர்களை (K.C.I.E., C.S.I., I.C.S.) சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ளவேண்டு மென்று சங்கத்தின் அக்கிராஸனாதிபதியவர்களை நிர்வாகஸபையார் கேட்டுக்கொள்கிறார்கள்.

மதுரை
7—12—29

K. ராமையங்கார்,
அக்கிராஸனம் வகித்தவர்.

1929ஸு டிசம்பர்ஸு 9உ (சுக்கிலஸு கார்த்திகைமீ 24உ) திங்கட்கிழமை காலை மதுரைச் சேதுபதி ஹைஸ்கூலிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்க மகாசபையாரால் ஆலோசித்துத் தீர்மானிக்கப்பெற்ற விஷய விவரக் குறிப்பு

1 மகா-ா-ா-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி உ. வே. சாமிநாதையரவர்கள்—சபைத்தலைவர்
2 ,, திரு. நாராயணையங்காரவர்கள்
3 ,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள், B.A., B.L,
4 ,, திரு. வீ. சாமிஐயங்காரவர்கள்
5 ,, T. C ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A, B.L, M.L.C.
6 ,, M. V. நாராயணசாமி ஐயரவர்கள், B.A, B.L.
7 ,, மு. இராகவையங்காரவர்கள்
8 ,, வ. மு. இரத்திநேசுவரையர் அவர்கள்
9 ,, S. ஆழ்வார்ஐயங்காரவர்கள்
10 ,, ராவ்சாஹிப் M. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள், B.A., B.L
11 ,, இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்கள்
12 ,, M. நடேச முதலியார் அவர்கள்
13 ,, R. கணபதிஐயரவர்கள், B.A., B.L.
14 ,, மு. ரா. அருணாசலக்கவிராயர் அவர்கள்
15 ,, N. R. கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B.A., B.L.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. சங்கத்தின் நிர்வாகஸபைக்கு மாட்சிமைதங்கிய ராஜா M. தினகரபஹதூர் அவர்கள் அக்கிராஸனாதிபதியாகவும், மகா-ா-ா-ஸ்ரீ ராவ்சாஹிப் M. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்கள், B.A., B.L., மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள், B.A., B.L., M.L.C., ஆகிய இருவரும் கௌரவகாரியதரிசிகளாகவும்,

மஹா-ள-ள-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி வே. சாமிநாதையரவர்கள்
,, மஹாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள்.
,, பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்
,, செ. மு. சையத் மகமத் ஆலிம் புலவரவர்கள்
,, ச. சோமசுந்தரபாரதி அவர்கள் M A , B L.
,, K. இராமையங்காரவர்கள், B A., B L.
,, N R கிருஷ்ணஸாமி ஐயங்காரவர்கள், B A , B L.
,, V. S. இராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள், B.A , B.L.

இவர்கள் அங்கத்தினராகவும் தெரிந்தெடுக்கப்பெற்றார்கள்

இந்தத் தீர்மானம் மகா-ள-ள-ஸ்ரீ M நடேச முதலியாரவர்களால் பிரேரேபிக்கப்பெற்று, மகா-ள-ள-ஸ்ரீ இ. மா. கோபாலகிருஷ்ணக்கோனார் அவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

2. சங்கத்தின் வித்யாவிஷய ஆலோசனை ஸபைக்கு அடியிற் கண்ட கனவான்கள் தெரிந்தெடுக்கப்பெற்றார்கள்.

மஹா-ள-ள-ஸ்ரீ மஹாமஹோபாத்யாய தாக்ஷிணாத்யகலாநிதி வே. சாமிநாதையரவர்கள்.
,, மஹாவித்வான், ரா. இராகவையங்காரவர்கள்
,, மு. இராகவையங்காரவர்கள்
,, பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள்
,, திரு. நாராயணையங்காரவர்கள்
,, மே. சொ. சுப்பிரமணியக்கவிராயரவர்கள்
,, K. G. சேஷையரவர்கள், B.A., B L.
,, ராவ்சாஹிப் V. P. சுப்பிரமணிய முதலியாரவர்கள்
,, S. சோமசுந்தரபாரதி அவர்கள், M.A., B.L.
,, M. நடேசமுதலியாரவர்கள்

இந்தத்தீர்மானம் மகா-ள-ள-ஸ்ரீ T C. ஸ்ரீநிவாஸையங்காரவர்களால் பிரேரேபிக்கப்பெற்று, திரு. வீ. சாமி ஐயங்காரவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

3. அண்ணாமலை யூநிவர்ஸிடி ஸெனேட்டு (Senate)க்கு மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பிரதிநிதியாக மகா-ள-ள-ஸ்ரீ ராவ்சாஹிப் M. மாணிக்கவாசகம் பிள்ளை அவர்களை அனுப்பவேண்டுமென்று மகா-ள-ள-ஸ்ரீ R. கணபதி ஐயரவர்களால் பிரேரேபிக்கப்பெற்று மகா-ள-ள-ஸ்ரீ சிவஞானம் பிள்ளை அவர்களால் ஆமோதிக்கப்பெற்று ஸபையோரால் அங்கீகரிக்கலாயிற்று.

வே. சாமிநாதையர்,
ஸபைத்தலைவர்.